சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No.2/2021

பெயர். திருமதி. ஆனந்தாயி நாள் 25.07.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு வயது மூப்பின் காரணமாக விபத்து சமயத்தில் நிரந்தர வருமானம் கிடையாது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் வெளிச்சம் இருந்தது. எத்தனை நபர்கள் வேன் சக்கரத்தை கழற்றி மாட்டினார்கள் என்று எனக்குத் தெரியாது. இவ்வழக்கில் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அதனால் நான் கூறுவதுபோல் விபத்து நடக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வேன் ஓட்டுநரை விசாரித்தால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். உண்மையில் வேன் மீது லாரி மோதியிருந்தால் வேனின் உரிமையாளர் நஷ்ட ஈடு கோரி வழக்கு போட்டிப்பார் என்றால் சரிதான். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று காவல் நிலைய ஆவணங்களைப் பார்த்தால் தெரியவரும் என்றால் சரியல்ல. எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்று தற்பொழுது ஞாபகம் இலலை. அதிக நஷ்ட ஈடு பெறுவதற்காக சிகிச்சை விவரங்கள் மற்றும் காயங்களை அதிகப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததால் லாரி ஓட்டுநர் மீது தவறு என்று கூற இயலாது என்றாலும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத் தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.